www.Padasalai.Net www.TrbTnpsc.com

**10 R**

Register No.

# முதல் திருப்புதல் தேர்வு – 2024

## தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

### பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15 x 1 = 15

1. "காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்திற்கு நல்ல உரங்கள்" – இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது

   அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஒலையும் ஈ) சருகும் சண்டும்

2. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்கவும்.

   அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

3. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள்...............

   அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

4. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்

   அ) உதியன் ; சேரலாதன் ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன் இ) பேகன் : கிள்ளிவளவன்

   ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

5. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்

   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல் இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

6. வாய்மையே மழைநீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி

   அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

7. 'மொழி ஞாயிறு' என்றழைக்கப்படுபவர் யார்?

   அ) தமிழழகனார் ஆ) கம்பர் இ) தேவநேயப் பாவாணர் ஈ) வைரமுத்து

8. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக மா.பொ.சி. கருதியது

   அ) திருக்குறள் ஆ) சிலப்பதிகாரம் இ) புறநானூறு ஈ) கம்பராமாயணம்

9. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்..........

   அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

10. மலர்கள் தரையில் நழுவும் எப்போது?

    அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப்பிணைத்தால் இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

11. ஓர் ஆண்டின் மொத்த மாதங்களின் எண்ணிக்கையைக் குறிக்கும் தமிழ் எண்ணைத் தேர்ந்தெடுக்க.

    அ) கரு ஆ) கஉ இ) க௲ ஈ) க௫

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

"பகர்வனர் திரிதரு நகரவீதியும் ;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும் ;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"

12. இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது?

    அ) நீதிவெண்பா ஆ) புறநானூறு இ) மணிமேகலை ஈ) சிலப்பதிகாரம்

13. பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.

    அ) பகர்வனர் ; பட்டினும் ஆ) பட்டினும் ; கட்டினும் இ) கட்டும் ; தூசும் ஈ) பட்டினும் ; மயிரினும்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

14. காருகர் – பொருள் தருக

அ) உழவர் ஆ) நெசவாளர் இ) பொற்கொல்லர் ஈ) காவலர்

15. இப்பாடலில் குறிப்பிடப்படும் நறுமணப் பொருட்கடள்

அ) பூக்களும் ; சந்தனமும் ஆ) பூக்களும் ; அகிலும் இ) அகிலும் ; சந்தனமும் ஈ) பட்டும் ; சந்தனமும்

**பகுதி – II (மதிப்பெண்கள் : 18)**

**பிரிவு – 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **4 x 2 = 8**

**21–வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16. வசன கவிதை – குறிப்பு வரைக.

17. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரமே திருக்குறளில் அமைந்திருக்கிறது.

ஆ) சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் செய்குதம்பிப் பாவலர்

18. 'இறடிப் பொம்மல் பெறுகுவீர்' – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

19. அவையம் – குறிப்பு வரைக.

20. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" – உவமை உணர்த்தும் கருத்து யாது?

21. 'செயற்கை' – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5 x 2 = 10**

22. பழமொழிகளை நிறைவு செய்க.

அ) ஒரு பானை.............. ஆ) அளவுக்கு..............

23. 'கிளர்ந்த' – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24. கலைச்சொல் தருக :

அ) Patent ஆ) Emblem

25. கீழ்க்காணும் ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.

அ) உதகமண்டலம் ஆ) கோயம்புத்தூர் இ) கும்பகோணம் ஈ) புதுக்கோட்டை

26. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதுக.

27. மரபுத் தொடரை பொருத்தமான தொடரில் அமைத்து எழுதுக.

அ) அள்ளி இறைத்தல் ஆ) ஆறப்போடுதல்

28. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) மடு – மாடு ஆ) வளி – வாளி

**பகுதி – III (மதிப்பெண்கள் : 18)**

**பிரிவு – 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' இது போல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும். பாட்டும் வசனமும் இல்லாத ஆட்டங்களில் புலி ஆட்டமும் ஒன்று. விழாக்களில் புலி வேடமிடுவோர் உடம்பெங்கும் புலியைப் போன்று கறுப்பும் மஞ்சளுமான வண்ணக்கோடுகளையிட்டுத் துணியாலான வாலை இடுப்பில் கட்டிக் கொள்வர்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**வினாக்கள் :**

அ) தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலை எது?

ஆ) புலி ஆட்டத்தில் இல்லாதவை எவை?

இ) இப்பத்தியில் குறிப்பிட்டுள்ள நிறங்கள் யாவை?

31. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில சான்றுகள் தருக.

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 34–ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 2 x 3 = 6

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவரலேறு சுட்டுவன யாவை?

33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

34. அ) 'அருளைப் பெருக்கி' – எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடல். **(அல்லது)**

ஆ) ''நவமணி' எனத் தொடங்கும் தேம்பாவணி பாடல்.

பிரிவு – 3

35. **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2 x 3 = 6

''கண்ணே கண்ணுறங்கு !
காலையில் நீயெழும்பு !
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு !
பாடினேன் தாலாட்டு !
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு – இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

36. தன்மை அணியை விளக்குக.

37. மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில் – இக்குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி – IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5 x 5 = 25

38. அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. **(அல்லது)**

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. அ) மாநில அளவில் நடைபெற்ற ''மரம் இயற்கையின் வரம்'' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. **(அல்லது)**

ஆ) உங்கள் பகுதியில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றவும் புதை சாக்கடையை தூர் வாரவும் வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.





Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

41. 25, திலகர் தெரு, மதுரை – 2 என்ற முகவரியில் வசிக்கும் செல்வம் மகன் அருள் என்பவர் எழுத்தர் பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் படிவத்தை பூர்த்தி செய்கிறார்.

தேர்வர் தன்னை அருளாக நினைத்துக் கொடுக்கப்பட்ட படிவத்தைப் பூர்த்தி செய்க.

42. அ) பள்ளியிலும் வீட்டிலும் நீங்கள் நடந்துகொள்ளும் முறைகளை பட்டியலிடுக. **(அல்லது)**

**ஆ) மொழிபெயர்க்க.**

அ) Education is what remains after one has forgotten what one has learned in school-Albert Einstein.

ஆ) Tomorrow is often the busiest day of the week - Spanish Proverb

இ) Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts - Winston Churchill

## பகுதி – V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3 x 8 = 24**

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

**(அல்லது)**

மாணவன் – கொக்கைப்போல, கோழியைப் போல – உப்பைப் போல – இருக்கவேண்டும் – கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளும் – குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக் கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் – ஆசிரியர் விளக்கம் – மாணவன் மகிழ்ச்சி – குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

44. அ) 'கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேட்கை.

மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) "அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45. அ) முன்னுரை – கல்பனா சாவ்லா இளமைப்பருவம் – விண்வெளிப் பயணம் – விண்வெளி சாதனைகள் – முடிவுரை

**(அல்லது)**

ஆ) முன்னுரை – சாலைப்பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு – ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் – விபத்துகளைத் தவிர்ப்போம் – விழிப்புணர்வு தருவோம் – முடிவுரை.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com